60) This Government will act on the basis of the Sachar Committee recommendations and more effectively implement schemes for educational advancement, economic empowerment and greater access to housing for minorities. The lands of the Wakf Board will be protected through necessary administrative and legal action.

61) The Hon'ble Chief Minister has retained the portfolio of the Welfare of the Differently Abled with himself, indicating the importance this Government accords to ensuring the welfare of this most vulnerable group. The provisions of the Rights of Persons with Disabilities Act, 2016 will be implemented with greater effectiveness. The Department of Differently Abled Welfare will be significantly strengthened with greater field presence to ensure that the benefits of various care, rehabilitation and support programmes reach the differently abled.

62) The late Hon'ble Chief Minister Kalaignar coined the term "Thirunangai" for transgenders, for the first time, in 2008. He established the "Thirunangai Welfare Board" and implemented welfare schemes through the board. In order to improve the lives and livelihoods of "Thirunangai", skill training will be provided for increasing job opportunities and self-employment activities.

63) Pursuit of sports and games improves physical and mental well being of individuals and society. High performance coaching, cash incentives, travel expenses for participation in competitions would be provided for athletes from the State to enable them to win more medals in Olympics and other international competitions. Recruitment of sports persons under sports quota in Government Departments will be effectively implemented.

64) This Government fully recognises the important role Government officials play in ensuring that the benefits of Government schemes reach the people. This Government will ensure that the welfare of Government officials and pensioners is fully protected. The New Health Insurance Scheme for government officials and pensioners will be implemented with substantially enhanced benefits.

65) The Government is determined to overcome all the challenges it faces and provide effective governance and rekindle economic growth in the State across all sectors. Ultimately this Government would govern

[2021 ஜூன் 22

62. 2008 ஆம் ஆண்டில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மூன்றாம் பாலினத்தினருக்கு 'திருநங்கைகள்' என முதன்முதலில் பெயரிட்டார்கள். திருநங்கைகளுக்கு நல வாரியத்தை அமைத்து, அதன் மூலம் நலத் திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். திருநங்கைகளின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த, வேலைவாய்ப்பு பெறுவதற்கும், தொழில் தொடங்குவதற்கும் ஏற்ற வகையில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

63. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பது தனிநபர் மற்றும் சமூகத்தின் உடல் மற்றும் மனநலனை மேம்படுத்துகிறது. ஒலிம்பிக் போட்டிகள் போன்ற சர்வதேசப் போட்டிகளில் அதிகப் பதக்கங்களை வெல்வதற்குத் தேவையான, உயர்மட்ட செயல்திறன் பயிற்சி, ஊக்கத்தொகை, போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணச் செலவுகள் ஆகியவை நமது மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும். அரசுத் துறைகளில் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின்கீழ் விளையாட்டு வீரர்களின் பணி நியமனம் திறம்பட செயல்படுத்தப்படும்.

64. அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில், அரசு அலுவலர்களின் பங்கினை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாக்கும். அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டத்தின் பலன்கள் மேலும் உயர்த்தப்பட்டு, செயல்படுத்தப்படும்.

65. எதிர்நோக்கியுள்ள அனைத்து சவால்களையும் வென்று, திறம்பட்ட நிர்வாகத்தை வழங்குவதற்கும், மாநிலத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஊக்குவிப்பதற்கும் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதை மக்களுக்கான இந்த அரசு உறுதி செய்யும். மாநிலத்தின் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு செயல்படுத்த விரும்பும் பல்வேறு கொள்கைத் திட்டங்களை இந்த உரையில்